# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No. 62 /2023 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கல்யாணி | க-பெ | பெரியகருப்பன் |
| ஊர்: | : | அறந்தாங்கி | சமயம்: | |
| வயது: | : | 65/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of** 15.05.2025

----------------------------------------------------------------------------------------------------

<u>குறுக்கு விசாரணை</u>

1. என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தது புகார்தாரர் ராக்கம்மாள்.ராக்கம்மாள் எனது உடன் பிறந்த தம்பி மகள். நான் எந்த வருடம் வரை எழில் நகரில் குடியிருந்தேன் என்று நினைவில்லை. நான் எழில் நகரில் இருந்தபோது சரவணனுக்கும் ராக்கம்மாளுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. எனக்கும் சரவனனுக்கும்தான் பிரச்சனை இருந்தது. நான் எழில் நகரில் சொந்தவீட்டில் வசித்தேன். எந்த வருடம் விற்றுவிட்டு அறந்தாங்கி சென்றேன் என்று நினைவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் செய்வேன். வழக்கு விபரங்கைள ராக்கம்மாள்தான் எனக்கு சொன்னார். கண்டனூரில் ராக்கம்மாள் எந்த முகவரியில் வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. ராக்கமாளுக்கும் சரவனனுக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் விபரம் எனக்கு தெரியாது என்றாலும், ராக்கம்மாள் கேட்டுக்கொண்டதற்கான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு கட்டுக்கு எத்தனை நோட்டுகள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது.

2) எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. ராக்கம்மாள் வீட்டின் அறையில் இருந்து பையில் எடுத்து வந்து பணத்தை

சரவணனிடம் கொடுத்தார் என்றால் சரிதான். பையில் பணம் இருந்ததால் எவ்வளவு பணம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ராக்கம்மாளுக்கும் சரவணனுக்கும் இருந்த கொடுக்கல் வாங்கல் தெரியாது என்றாலும், ராக்கம்மாள் எனது தம்பி மகள் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் சரவணனுக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்ததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.01 18:17:55 +0530

விரைவு நீதிமன்றம், காரைக்குடி(FAC)